நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.50/2022

அரசு தரப்புக்காக அ. சா. 1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயப்பிரியா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 1 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day of July 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.21 )

நான் தற்போது பண்ருட்டியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனது அப்பா பழ வியாபாரம் செய்து வருகிறார். வழக்கில் இறந்துபோன செங்கேனி என்பவர் எனது அம்மா. என்னுடன் தம்பி சத்யா வசித்து வருகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 26.09.2021 தேதியில் எனது அம்மா எப்போதும் போல சாயந்தரம் நேரத்தில் குளித்து கொண்டிருந்தார். ஜெயபிருந்தா என்பவர் எனது அம்மாவிடம் வந்து *"நீ எப்படி என் வீட்டுக்காரர் கிட்ட பேசுவ, நீ எல்லாம் திருந்த மாட்டியா தேவுடியா"* என்று சொல்லி எனது அம்மாவை பைப்பால் கன்னத்தில் அடித்து விட்டார். அப்போது நான் அங்கு இருந்தேன். அடித்து விட்டு ஜெயபிருந்தா போய்விட்டார். மறுநாள் காலை 27.09.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு ஜெயபிருந்தாவின் அண்ணன் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி செந்தில் எங்கள் வீட்டிற்கு வந்தார். எனது

அப்பாவிடம் " உன் பொன்டாட்டியை ஒழுங்கா பார்த்துக்கோ" என்று சொல்லிவிட்டு செந்தில் கிளம்பி விட்டார். ஜெயபிருந்தாவின் குழந்தைகள் பிறந்தததில் இருந்து எங்கள் வீட்டில் தான் வளர்ந்தார்கள். இந்த சண்டை எதுவுமே எனக்கு தெரியாமல் நான் ஸ்கூலுக்கு போய்விட்டேன். மாலை வந்து ஜெயபிருந்தா வீட்டிற்கு குழந்தைகளை பார்க்க போனேன். அப்போது ஜெயபிருந்தாவின் கொழுந்தனார் குமரேசன் என்னிடம் "உங்களுக்கும் எங்களுக்கும் சண்டை நீ ஏன் இங்கு வருகிறாய் நீ போ வீட்டுக்கு" என்று சொல்லி என்னை வீட்டுக்கு அனுப்பி விட்டார். நான் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டேன். அதன்பிறகு ஜெயபிருந்தா, ஜெயபிருந்தாவின் அக்கா மாலா, ஜெயபிருந்தாவின் அண்ணன் ஆஜர் எதிரி செந்தில்குமார் இரவு 07.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். வந்து "நீங்க எல்லாம் திருந்த மாட்டிங்களா தேவுடியா" என்று என்னையும் எனது அம்மாவையும் கேட்டுவிட்டு என்னையும் எனது அம்மாவையும் ஜெயபிருந்தா அடித்தார். எதிரி செந்தில்குமார் எனது அம்மாவை பார்த்து "உன் மகளை கடத்தி போய்விடுவேன்" என்று சொல்லி மிரட்டினார். அதோடு அவர்கள் அனைவரும் எங்கள் வீட்டில் இருந்து போய்விட்டார்கள். அதன்பிறகு மறுநாள் 28–ம் தேதி எதுவும் நடக்கவில்லை. அதற்கு மறுநாள் 29–ம் தேதி நான் ஸ்கூலுக்கு போய்விட்டேன். மாலை 04.00 மணிக்கு ஸ்கூல்விட்டு வீட்டிற்கு வந்தேன். வந்த பிறகு எனது அம்மா ஒரு மாதிரி படுத்துக்கொண்டு இருந்தார். நான் என்ன என்று கேட்டேன். எனது அம்மா ஒன்றும் இ ல்லை என்று சொன்னார். திரும்பவும் நான் கேட்ட பிறகு எனது அம்மா என்னிடம் "நான் மருந்து குடித்துவிட்டேன் என்னை காப்பாத்து" என்று சொன்னார். ஏன் அம்மா மருந்து குடித்தாய் என்று நான் கேட்டேன். என் அம்மா என்னிடம் "காலை செந்தில் (எதிரி) வந்து ரோட்டு வாசலில் நின்று என் தங்கச்சி மருந்து குடிச்சிட்டா அவளுக்கு ஏதுனா ஆச்சினா நான் உன்னை சும்மா விட மாட்டேன் டி தேவிடியா " என்று அம்மாவை கேட்டு இருக்கிறார். அதன்பிறகு "என் தங்கச்சியே மருந்து குடிச்சிட்டா நீயெல்லாம் உயிரோடு இருந்து என்ன பண்ண போர நீயும் எதுனா குடிச்சி சாவடி தேவுடியா " என்று எனது அம்மாவிடம் சொன்னதாக சொன்னார். ரோட்டில் நின்று இதை எல்லாம் கேட்டதாலும் என்னை கடத்துவதாக அதற்கு முதல்நாள் சொன்னதாலும் நாம உயிரோடு இருந்தால் இதெல்லாம் செய்து விடுவார்கள் என்று நினைத்து எனது அம்மா மனஉளைச்சலுக்கு ஆளாகி வீட்டில் இருந்த கொக்கு மருந்தை குடித்துவிட்டதாக என்னிடம் மாலை 04.30 மணிக்கு எனது அம்மா சொன்னார். எனது அம்மா 02.00

மணிக்கு மருந்து குடித்ததாக சொன்னார். அதன்பிறகு எனது அம்மா என்னிடம் வீட்டில் இருந்த நகையை எடுத்து கொடுத்துவிட்டு "நீ பத்திரமா இரு" என்று சொல்லிவிட்டு மயங்கி விட்டார். அதன்பிறகு எனது அண்ணன் வெளியே நின்று இருந்தவரிடம் அம்மா மருந்து குடித்து விட்டார் என்று சொன்னேன். நானும் எனது அண்ணன் பிரகாசும் எனது அம்மாவை பண்ருட்டி ஜி.எச் மருத்துவமனைக்கு கூட்டிப்போனோம். அந்த பண்ருட்டி மருத்துவமனையில் எனது அம்மா 02.00 மணிக்கு மருந்து குடித்ததால் தொண்டை நரம்பு ஒட்டிக்கொண்டு பேச முடியாமல் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். கடலூர் ஜி.எச் மருத்துவமனைக்கு எடுத்துப்போக சொன்னார்கள். அதற்கு முன்பே பண்ருட்டி ஜி.எச்–ல் இருந்து எனது அப்பாவிற்கு நான் போன் செய்தேன். எனது அப்பா அந்த சமயத்தில் குடித்துவிட்டு இருந்தார். எனது மருந்து குடித்துவிட்டதால் எனது அப்பாவும் வீட்டில் இருந்த ஆலா என்ற துணிக்கு போடும் மருந்தை குடித்து விட்டு மருத்துவமனைக்கு வந்தார். எனது அம்மாவை ஆம்புலன்சில் ஏற்றும்போது எனது அப்பா தானும் ஆலா குடித்து விட்டதாக சொன்னார். எனது அப்பாவையும் பண்ருட்டி ஜி.எச்–ல் சிகிச்சை செய்தார்கள். அதன்பிறகு எனது அப்பாவையும் அம்மாவையும் கடலூர் ஜி.எச்–ற்கு கூட்டிப்போவதற்காக ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு பண்ருட்டி அரசு மருத்துவமனை தாண்டுவதற்குள் எனது அம்மா இறந்துவிட்டார். அதன்பிறகு ஆம்புலன்ஸ் உள்ளே வந்து பண்ருட்டி ஜி.எச்–ற்கே போய்விட்டார்கள். பண்ருட்டி ஜி.எச்–ல் சிகிச்சை செய்து பார்த்தார்கள். ஆனால் எனது அம்மா இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது அப்பாவிற்கு குடல் வெந்துவிட்டதாகவும் இரண்டு நாள் குடிக்காமல் இருந்தால் சரியாகிவிடும் என்றும் சொன்னார்கள். அதன்பிறகு பண்ருட்டி போலிஸ் ஸ்டேஷனில் இருந்து போலிசார் வந்து கம்பிளெயிண்ட் கொடுக்க சொன்னார்கள். எங்களால் அப்போது கம்பிளெயின்ட் கொடுக்க முடியவில்லை. அதன்பிறகு இரவு போலிஸ் ஸ்டேஷனில் இருந்து வந்து சொல்லி எனது சொந்தக்காரர்கள் அனைவரும் சொன்னபிறகு மறுநாள் காலை 09.00 மணிக்கு பண்ருட்டி காவல்நிலையத்தில் நான் எதிரி செந்தில் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான். (அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது அம்மாவின் பிரேதத்தை நான் எனது அம்மா என்று அடையாளம் காட்டினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது வீடு சத்தியமூர்த்தி தெருவில் உள்ளதா என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் பலராமன், பட்டுசாமி ஆகியோர் வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேலும் முருகன் வெல்டிங் கடை, சீனுவாசன் பெட்டிக்கடை, சிவானந்தம் டீக்கடை மற்றும் ராஜாராம் டிபன் கடை ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது. எனது வீட்டிற்கும் எதிர்தார்போல் 200 மீ தள்ளி குமரேசன் வீடு உள்ளதா என்றால் உள்ளது. எதிரி செந்தில் குமார் என்ன ஊர் என்றால் எனக்கு தெரியாது. மாலா என்ன ஊர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகாரை யார் எழுதினார் என்றால் எனது தாய்மாமா அழகப்பன் எழுதினார். இதில் உள்ள விவரங்கள் நான் சொல்ல சொல்ல எனது மாமா எழுதினார். புகாரில் நான் சொல்ல சொல்ல எழுதினேன் என்று எனது மாமா அழகப்பன் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் இல்லை. நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். இந்த விவரத்தை புகாரில் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் நான் கையெழுத்து போட்டேன். எங்கள் வீட்டில் குளியலறை வீட்டின் உள்ளே உள்ளதா வெளியே உள்ளதா என்றால் வீட்டின் பின்புற கதவின் அருகே உள்ளது. எங்கள் வீடு சிமெண்ட் ஷீட் போட்ட வீடு தானே என்றால் ஆமாம். ஜெயபிருந்தாவின் கணவர் பெயர் என்ன என்று கேட்டால் பழனிவேல். ஜெயபிருந்தா எத்தனை வருடங்களாக எங்கள் ஊரில் வசிக்கிறார் என்றால் திருமணமாகி வந்ததில் இருந்து 10 வருடங்களாக வசிக்கிறார். ஜெயபிருந்தாவிற்கு குழந்தை பிறந்த பிறகு அந்த குழந்தைகள் எங்கள் வீட்டில் வந்து விளையாடும். நானும் அவர்கள் வீட்டிற்கு சென்று பேசுவேன். நட்பாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். பழனிவேல் சம்பவ சமயத்தில் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் டாடா ஏசிஇ என்ற வண்டி ஓட்டிக்கொண்டு இருந்தார். ஜெயபிருந்தாவிற்கு கல்யாணம் ஆன 10 வருடங்களுக்கு பிறகுதான் எனது அம்மா செங்கேனிக்கும் ஜெயபிருந்தாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். ஜெயபிருந்தா எத்தனை மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றும் என்னையும் எனது அம்மாவையும் அடித்தார்கள் என்றும் புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எனது அம்மாவை ஜெயபிருந்தா 26–ஆம் தேதி கன்னத்தில் கம்பியால் அடித்ததாகவோ நான் அதை நேரடியாக பார்த்ததாகவோ புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது அம்மாவை ஜெயபிருந்தா என்ன காரணத்திற்காக தனது கணவருடன் பேசகூடாது என்று சொன்னார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. செந்தில் எனது

அப்பாவிடம் உனது மனைவியை கண்டித்து வை என்று சொன்னதை நான் நேரில் பார்த்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா என்னிடம் சொன்னதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.1 புகாரில் 27–ஆம் தேதி மாலை நான் எத்தனை மணிக்கு ஜெயபிருந்தா வீட்டிற்கு சென்றேன் என்று நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் 27 ஆம் தேதி சாயந்தரம் குமரேசன், செந்தில், மாலா, ஜெயபிருந்தா ஆகியோர் எங்கள் வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்து எனது அம்மாவையும் என்னையும் மிரட்டினார்கள் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் நேரம் குறிப்பிடவில்லை. என்னை கடத்தி கொண்டு சென்று விடுவேன் என்று எதிரி செந்தில் சொன்னதை வைத்து நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. என்னையும் எனது அம்மாவையும் ஜெயபிருந்தா அடித்தார்கள் என்பது குறித்தும் மிரட்டினார்கள் என்பது குறித்தும் நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நான் பண்ருட்டி முத்தையா பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன். எங்கள் வீட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் கால் மணி நேரத்தில் நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது. மதிய உணவிற்கு நான் வீட்டிற்கு வருவேனா என்றால் இல்லை. மதிய உணவை நான் காலையிலேயே எடுத்து சென்று விடுவேன். எனது அப்பாவின் பழக்கடை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 10 நிமிட நடை தூரத்தில் உள்ளது. எனது அப்பா விவசாயம் எதுவும் செய்யவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னபடி எதிரி செந்தில் எனது வீட்டு வாசலில் வந்து எனது அம்மாவை திட்டியதாகவும் செத்துப்போ என்று சொன்னதாகவும் சொன்ன விவரத்தை எனது அம்மா என்னிடம் சொன்னதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வீட்டு வாசலில் என்று மட்டும் குறிப்பிடவில்லை. புகாரில் எனது அண்ணன் வீட்டிற்கு வெளியே இருந்ததாக எழுதியுள்ளேனா என்றால் இல்லை. 29 ஆம் தேதி செந்தில் எத்தனை மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் எனது அம்மா என்னிடம் சொல்லவில்லை. எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள டீக்கடை பகல் நேரத்தில் திறந்திருக்குமா என்றால் இருக்கும். 29 ஆம் தேதி நான் வீட்டிற்கு சென்றதாக சொன்ன சமயத்தில் அந்தக் கடை திறந்திருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. டீக்கடை மற்றும் அங்குள்ள கடைக்காரர்களும் எனது அம்மாவை எதிரி சத்தம்போட்டதா என்னிடம் சொல்லவில்லையா என்றால் நான்

அவர்கள் யாரையும் பார்க்கவில்லை என்று சொல்கிறேன். போரட் என்ற கொக்கு மருந்து எதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தது என்று நான் புகாரிலோ போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. எங்கள் வீட்டில் இருந்து பண்ருட்டி ஜி.எச் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 5 நிமிட தூரத்தில் உள்ளது. எனது அப்பா ஆலா மருந்து குடித்துவிட்டார் என்பதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. புகாரில் இரவு நாங்கள் மனஉளைச்சலில் இருந்தோம் அதனால் நாங்கள் புகார் கொடுக்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் அதை நான் சொல்லவில்லை. பண்ருட்டி ஜி.எச் மருத்துவமனைக்கு எனது அம்மாவை எத்தனை கூட்டிச்சென்றோம் என்றால் 05.15 மணிக்கு. எதிரி செந்தில்குமாரை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் ஜெயபிருந்தா மாமியார் வீட்டிற்கு வந்தபோதில் இருந்து 10 ஆண்டுகளாக தெரியும். எதற்காக ஜெயபிருந்தா மற்றும் எதிரி செந்தில் குமார் ஆகியோர்கள் என் அம்மாவை ஜெயபிருந்தாவின் கணவருடன் பேசகூடாது என்ற விவரத்தை என் அம்மாவிடம் கேட்டது பற்றியும் எனது அம்மா என்னிடம் சொன்னது பற்றியும் நான் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் எனது அப்பா ஆலா மருந்து குடித்து சிகிச்சை பெற்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா, எதிரி செந்தில் குமார் தன்னை அசிங்கமாக திட்டியதாகவும் செத்துப்போ என்று சொல்லியதாகவும் என்னிடம் சொல்லவில்லை என்றும் நான் சொல்வது போல எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது அம்மாவை பண்ருட்டி ஆஸ்பித்திரிக்கு நான் கூட்டிச்செல்லவில்லை என்றும் எனது அப்பா தான் எனது அம்மாவை கூட்டிச்சென்று சேர்த்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் அதனால் எங்கள் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு என்றும் அதனால் எனது அம்மா மருந்து குடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பயந்து தான் எனது அப்பா ஆலா எடுத்து குடித்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் என் அம்மா மற்றும் என் அப்பா எங்களுடன் நன்றாக பழகிய ஜெயபிருந்தாவிடம் கடன் கேட்டார்கள் என்றும் அதற்கு அவர் என் கணவர் டிரைவர் வேலை தான் பார்க்கிறார் அவரால் பணம் தரமுடியாது என்றும் வேண்டுமென்றால் என் அண்ணன் செந்தில்குமாரை கேட்டு சொல்கிறேன்

என்றும் செந்தில் குமாரை கேட்டபோது தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னார் என்றும் அதனால் தான் செந்தில்குமார் மீது பொய் புகார் கொடுத்து ஜெயபிருந்தா தான் எங்களை அடித்தார் என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் புகார் கொடுத்து ஒன்றரை மாதத்திற்கு பிறகு எதிரியை கைது செய்தார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் மீது எனது அம்மாவின் இறப்பு சந்தேகத்திற்கு இடமானது என்று சொல்லி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.31)

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.